DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.378/13

Deposition of Witness: PW 4

| | |
|---|---|
| Name சந்திரகலா | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2020

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் ஊஞ்சாம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா3 என்அம்மா. அசா1ஐ எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். 2000ம் வருடம் எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை அசா1க்கு விற்பனை செய்தோம். 1,2 எதிரிகள் போலி பத்திரம் தயார் செய்து எங்கள் மீது வழக்குதாக்கல் செய்தார்கள். மேற்படி நிலத்தை பொறுத்து பெரியகுளம் நீதிமன்றத்தில் எங்களுக்கு சாதகமாக தீர்ப்பானது. 1,2 எதிரிகள் 3,4 எதிரிகளுக்கு 2006ம் ஆண்டில் 30 செண்ட் நிலத்தை கிரயம் செய்துக்கொடுத்துவிட்டார்கள். கலாவதி சேர்ந்து நடத்திய வழக்கில் எங்களுக்கு சாதமாக தீர்ப்பானது. 3,4 எதிரிகள் பெயரில் உள்ள ஆவணம் போலியானது என்றும் தீர்ப்பானது. எதிரிகள் அடிக்கடி பிரச்சனை செய்துவருவதால் அசா1 போலிசில் புகார் கொடுத்தார். எதிரிகள் நிலத்திற்கு வந்து வாழை மரத்தை வெட்டிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலிச் விசாரணையின் போது நான் இடம் எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று தான் சொன்னேன். வேறு விசயங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அசா1 என்ன விசயத்திற்காக புகார் எதிரிகள் மீது கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அசா1 எனக்கு தெரிந்தவர் என்பதவால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.